**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2018**

---

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2018 திசெம்பர் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினது பொறுப்பு**

---

சபையின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களும் வருடாந்த வரைபு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான பேரேட்டுக் கணக்குகள் நிதிக்கூற்றுக்கள் வரைபு ஆண்டறிக்கை என்பன 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 கணக்கேடுகள் மற்றம் பதிவேடுகளைப் பேணுதல்**

---

சபை செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள், ஏடுகள், பதிவேடுகள் என்பன பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை**

---

சபையினால் இறுதியாகத் தயாரித்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் என்பன தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 2,231,172,049 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 686,456,256 |
| மொத்த சொத்துக்கள் | 2,917,628,305 |

பொறுப்புக்கள்
---------------------

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,532,160,239 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 725,608,431 |
| | ---------------------- |
| மொத்த பொறுப்புக்கள் | 3,257,768,670 |
| தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை | (340,140,366) |
| | ---------------------- |
| மொத்த பொறுப்புக்கள் | 2,917,628,305 |
| | ========== |
| மொத்த வருமானம் | 571,650,747 |
| மொத்த செலவுகள் | (1,135,549,881) |
| | --------------------- |
| பற்றாக்குறை | (563,899,134) |
| | ========== |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 8.2.1 ஆம் பந்தி | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நியமன அதிகாரியால் மாத்திரம் நியமனக் கடிதம் வழங்கக் கூடியதாக இருந்த போதிலும், நிரந்தர அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் 27 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு பொது முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இந்த நிறுவனத்தில் அக் காலப்பகுதியில் முழுநேர தலைவர் சேவையில் இல்லாதிருந்ததினால் நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாகப் பேணும் குறிக்கோளுடன் நிருவாகம், காணி, பெருந்தோட்டம் என்பனவாக சில உள்ளகப் பிரிவுகளின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் அவ்வாறு பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் பொது முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரால் சேவை அத்தியாவசியத்தின் அடிப்படையில் மேற்கூறிய நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நியமன அதிகாரியால் நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371(II)இ | முற்பணங்களை பெற்றுக் கொண்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் அப்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 62 சந்தர்ப்பங்களில் 24 உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1,486,350 தொகையான முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு இரண்டு மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்காக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளக சுற்றறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வழங்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான சட்டங்களின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளுக்குச் சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் போது சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி காணப்படுமாக இருந்தால் தவிர ஏனைய சந்தர்ப்பங்களின் போது அது 30 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 03 தேயிலைத் தொழிற்சாலைகள் 50 ஆண்டுகள் காலம் வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | குருக்ஓய மற்றும் ஹரன்கல தொழிற்சாலைகள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அப்போதைய நிருவாகத்தினரின் தீர்மானத்தின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் | மீளாய்வாண்டின் போது எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகளுக்குத் தகைமையற்ற 09 | சபை தோற்றுவிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய ஒன்பது உத்தியோகத்தர்களுக்கு | சபை தொடர்ச்சியாக நட்டம் அடைகின்ற நிலைமையின் அடிப்படையில் செலவுகளை |

| | | | |
|---|---|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களுக்கு அப்படிகளாக ரூபா 5,444,168 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | போக்குவரத்துப் படிகளைச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. இந்த உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களிலும் அச்சலுகைகளை அனுபவிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. பொது முகாமையாளர் கடமைத் தேவைப்பாட்டிற்காக தூரப் பயணம் செல்ல வேண்டியிருப்பதனால் அத்தூரத்தின் அளவை கருத்தில் கொண்டு எரிபொருள் படியை வழங்குவதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | கட்டுப்படுத்த வேண்டியுள்ளமை மற்றும் அரசாங்கத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 பெப்பரவரி 28 ஆந் திகதியிலிருந்து 20 ஆண்டுகள் காலத்திற்காக கொலபதன தோட்டத்தில் அமைந்துள்ள 6 ஏக்கர் 2 ரூட் பரப்பளவுள்ள பாரிய அளவான கருங்கற்களில் உடைக்கக்கூடிய கற்களின் அளவு தொடர்பாக முன் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு நிதிப்பிரமணாம் 686(இ) இன் பிரகாரம் அமைச்சு கேள்விச் சபையின் மூலம் ஒரு குத்தகைதாரர் நிர்யணிக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்கள் போட்டிக்குச் சமரப்பிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இன்றி | அகழ்வு செய்யப்படக்கூடிய கல்லின் அளவு சம்பந்தமாக (GSMB) புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மதிப்பீடு இல்லாதிருந்ததுடன் தனியார் மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அப்போதிருந்த நிருவாகத்தினர்களால் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி கோரப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | நிர்ணயிக்கப்பட்ட வாறு மதிப்பீட்டினைத் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட வாறு பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணியின் பெறுமதிக்காக ஒரே தடவையில் செலுத்தப்பட்ட ரூபா 20.24 மில்லியன் பணத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மேலே (அ) பந்தியில் குறிப்பிட்ட கருங்கல் 20 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு நபர்களால் அதிகாரமின்றி உடைக்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்காக சட்ட நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகழ்வு செய்யப்படக்கூடிய கல்லின் அளவு சம்பந்தமாக (GSMB) புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மதிப்பீடு இல்லாதிருந்ததுடன் தனியார் மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அப்போதிருந்த நிருவாகத்தினர்களால் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி கொரப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | அதிகாரமற்ற நபர்களுக்காக சட்ட நடவடிக்கை எடுத்து உரிய நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை பராமரித்து வருகின்ற காணிகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அதிகாரமற்ற நபர்கள் கைப்பற்றியுள்ள காணிகளின் அளவு 313 ஏக்கர்களாகத் குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்வு வெளிப்படுத்திய தகவல்களின் பிரகாரம் 893 நபர்களால் 861 ஏக்கர் கணிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அதிகாரமின்றி கைப்பற்றப்பட்டிருந்தும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கோ நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். குமாரவத்த, ஹந்தானை ஆகிய தோட்டங்களில் இருக்கின்ற அதிகாரமற்ற குடியிருப்பாளர்களில் 50 நபர்களுக்கு அண்மித்த அளவானவர்களுக்கு வெளியேறும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்நடவடிக்கைகளின் போது செலவு செய்ய வேண்டியுள்ள நிதிக்கிரயம் அதிகரிப்பதன் காரணமாக அச்செயற்பாடு முறைப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டிக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை அதிகாரமின்றி கைப்பற்றுதல் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்யும் போது தேயிலை ஆணையாளரால் வெளியிடப்பட்ட விலைகள் அல்லது அதை விட கூடிய விலைகள் தீர்மானிக்கப்பட | ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. 2014 ஆம் ஆண்டில் சபையின் கட்டுப்பாட்டாளரால் தேயிலைக் கொழுந்துகள் இன்சயிட் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் சபை கொழுந்துகளை | உடன்படிக்கை செய்யப்பட்ட விலைகளின் பிரகாரம் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், மஹவில தொழிற்சாலையின் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்யும் போது வெளித்தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது தேயிலை ஆணையாளர் வெளிப்படுத்திய விலையை விட குறைந்த விலையை நிர்ணயித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3.75 மில்லியன் வருமானம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. | வழங்கியிருந்ததுடன் இலங்கை தேயிலைச் சபையால் வெளியிடப்பட்ட விலைகள் மற்றும் எங்களுக்கு அக்கம்பனி செலுத்திய விலைகளை ஒப்பீடு செய்து பார்த்த போது அவ்வாறான வருமான இழப்பு காணப்படவில்லை. | |
| (உ) | சபைக்குச் சொந்தமான மட்டக்குளி பிரதேசத்தில் இரண்டு இடங்களில் அமைந்துள்ள மொத்தமாக 0.707 ஹெக்டயர் காணிகள் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கு 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது விற்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அந்த நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 101.03 மில்லியன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மட்டக்குளிப் பிரதேசத்திலேயே சபைக்குச் சொந்தமான 05 ஹெக்டயர் காணி இழப்பீட்டுப் பணத்தை தீர்மானிக்காது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | இலங்கை உயர்கல்வி நிறுவனத்திற்கு இக்காணி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான கோவைகள் எங்கள் நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை திருப்திகரமான பதில் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை அறவீடு செய்வதற்காக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | பணத்தை அறவீடு செய்ததன் பின்னர் மாத்திரம் காணியை விற்பனை செய்தல் இடம்பெற வேண்டியதுடன் ஏனைய தரப்பினர்களுக்கு காணியை ஒப்படைப்பதற்கு முன்னர் அதற்கான இழப்பீட்டுப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | 1995 செப்தெம்பர் 21 ஆந் திகதிய SAI/A/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு வருடாந்த குத்தகைப் | இணங்க முடியாதுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை 50% ஆல் குத்தகையை அதிகரிப்பதற்கு கையொப்பமிட்டுள்ள குத்தகை உடன்படிக்கையில் நிபந்தனைகள் உள்ளடக்கப் பட்டிருக்காததனால் அரசாங்க | அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பணம் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை அக்குத்தகைப் பணம் 50 சதவீதத்தால் அதிகரிக்கும் வகையில் குத்தகை கணிக்கப்படுதல் வேண்டும். எனினும், சபையினால் 2001 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்ட ஹந்தானை தோட்டத்தின் 01 ஏக்கர் 1.3 பேர்ச்சஸ் அளவான தொழிற்சாலை மற்றும் 1986 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்கிய மேலும், 03 தோட்டங்களின் 64.55 ஹெக்டயர் காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் சமமான குத்தகைப் பணம் அறவிடுவதன் காரணமாக சபையினால் அறவிடப்பட வேண்டியதாகவிருந்த ரூபா 32.24 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு மற்றும் 50% ஆல் குத்தகையை அதிகரிப்பதற்கு இணங்க குத்தகைப் பணத்தை திருத்தம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. ஒவ்வொரு காலப்பகுதியிலும் இருந்த நிருவாகத்தினரால் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட பதில்களின் பிரகாரம் அடுத்துவரும் உடன்படிக்கைகளுக்காக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | ஒரு தடவை 50 சதவீதத்தால் அதிகரிக்கும் வகையில் குத்தகைப் பணத்தை தீர்மானித்தல் வேண்டும். |
| (எ) | சபைக்குச் சொந்தமான 09 தோட்டங்களின் 609 ஹெக்டயர் அளவான காணிகள் 1986 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகைதாரரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட வேண்டியிருந்த ரூபா 61.55 மில்லயன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கி கொள்ள முடியாது. பெறவேண்டிய மீதி கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததானது 1995 ஆம் ஆண்டு காணி சம்பந்தமாக சனாதிபதி வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட 50% ஆல் குத்தகையை அதிகரித்தலை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டாகும். இதனைச் செலுத்துமாறு குத்தகைதாரருக்குத் தெரியப்படுத்தியிருந்தும் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இது தாக்கமளிப்பதில்லை எனக் குறிப்பிட்டு சில குத்தகைதாரர்கள் இதை செலுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக உடன்படிக்கயில் குறிப்பிட்ட அளவினை பெறவேண்டியதாக எடுத்துக் கொள்ள முடியாது. | குத்தகைப் பணத்தை அறவிட்டதன் பின்னர் மாத்திரம் காணியை குத்தகைக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது 24 உத்தியோகத்தர்களுக்கு 2 இலிருந்து 10 வரையான சம்பள ஏற்றங்கள் மீளாய்வாண்டின் போது வழங்கியதன் காரணமாக ரூபா 594,095 தொகையான மேலதிகச் சம்பளச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக சேவையாற்றிய ஊழியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகுளை மீளாய்வு செய்ததன் பின்னர் மேலதிக சம்பள ஏற்றங்கள் அல்லது பதவியுயர்வு கிடைக்காத ஊழியர்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் 02 சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்ததுடன் இதன் பின்னர் இவ்வாறான மேலதிகப் படிகளை வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. | சம்பள ஏற்றங்களை வழங்கும் போது தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையினால் நிருவகிக்கப்படுகின்ற 15 தோட்டங்களின் 10,143 ஹெக்டயர் அளவான காணிகளில் 3,169 ஹெக்டயர்கள் தேயிலை மற்றும் ஏனைய பயிர்களுக்காக ஈடுபடுத்தப்படுவதுடன் கட்டிடங்களைத் தவிர்த்து தேயிலைப் பயிர் செய்கைக்கு ஈடுபடுத்துவதற்கு முடியுமாக இருந்த 5,829 ஹெக்டயர் காணிகளை தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்துவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அக்காணி விளைவற்றுக் காணப்பட்டது. | இதில் 2971 ஹெக்டயர் அளவான காணிகள் தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்களின் மற்றும் சபையின் தலையீட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தை உருவாக்குவதற்கு மற்றும் குத்தகைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் மேல் மட்ட முகாமையாளர்களின் இடமாற்றத்தின் அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது. மீண்டும் இந்த ஆண்டில் புதிய தலைவரின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. | அனைத்து காணிகளிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தொர்ச்சியாக சபையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலையின் தரத்தை அதிகரிப்பதற்காகவும் உற்பத்திக் கிரயத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்ததன் காரணமாக | ஏற்றுக் கொள்கின்றேன். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தேயிலையின் விலை வீழ்ச்சியடைதல் மற்றும் 2018 ஆம் ஆண்டில் பசளைப் பாவனை ஒப்பீட்டு ரீதியாக | தேயிலையின் தரத்தை அதிகரிப்பதற்கும் உற்பத்திக் கிரயத்தை கட்டுப்படுத்து வதற்கும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சபை உற்பத்தி செய்கின்ற ஒரு கிலோ தேயிலையின் பங்களிப்பு (contribution per kilogram) மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைவடைந்தமையின் காரணமாக தேயிலையின் தரம் குறைவடைந்ததனால் தேயிலைக்காக நியாயமான விலையைப பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், உற்பத்தி கிரயத்தின் பிரதான கூறாகிய தொழிலாளர் கூலி (Labour wages) அதிகரித்ததன் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டிற்கான உற்பத்திக் கிரயம் அதிகரித்ததன் பேரில் ஒரு அலகிற்கான பங்களிப்பு மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமத்தின் பிரகாரம் மலைநாட்டுத் தேயிலையின் ஒரு ஹெக்டயருக்கான சராசரி 1200 கிலோ கிராம்களாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான ஆயுள்காலம் மிகைத்த பழைய பயிர்களை அகற்றி புதிய பயிர்ச்செய்கையை ஆரம்பிக்காமை, பசளைகள் தொடர்ச்சியாக இடப்படாமை, பயிர் இல்லாத இடங்களில் தொடர்ச்சியாக நடுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை என்பவற்றின் காரணமாக சபையின் 15 தோட்டங்களில் 398 கிலோ கிராமிற்கும் 759 கிலோ கிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டிருந்தும் அந்த உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு நிதி ரீதியான நிதியம் இல்லை. அவ்வாறு இருந்தும் 2016 இலிருந்து 2018 வரை படிப்படியாக விளைச்சல் அதிகரிக்கப்பட்டுள்ளது. | சராசரி விளைச்சலை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு ஈடுபடுத்த முடியாதிருந்த 959 ஹெக்டயர் நாற்று மேடைகள் மற்றும் பயிர் செய்யப்படாத வெற்றுக் காணிகள் 1770 ஹெக்டயர்கள் | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்கு நிதி இல்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்தும் அக்காணிகளை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் பசளைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 87.38 மில்லியன் பணம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் சபையினால் அதற்காக ரூபா 7.59 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக பயிர்ச் செய்கையின் தேவைப்பாட்டின் பிரகாரம் பசளை ஈடுபடுத்தப்படாமையால் தேயிலை விளைச்சல் குறைவடைந்துள்ளது. | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்கு நிதி இல்லை. | திட்டமிட்டவாறு பயிர்ச் செய்கைக்குத் தேவையான பசளைகள் இடப்படுதல் வேண்டும். |
| (ஊ) | சபையினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேட்டின் பிரகாரம் (Hectarage statement) இறப்பர், பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தப்படக்கூடிய காணிகள் 2177 ஹெக்டயர்களாக இருந்த போதிலும், 563 ஹெக்டயர்களில் மாத்திரம் இறப்பர் பயிரிடப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்கு நிதி இல்லை. | திட்டமிடப்பட்ட காணியை நிர்ணயிக்கப் பட்டவாறு பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைமை அலுவலகம் செயற்படுகின்ற கட்டிடத்தின் 33,567 சதுர அடி 2011 மற்றும் 2017 காலப்பகுதியின் போது ஒரு ஆண்டிற்கு ரூபா 22.52 மில்லியன் வீதம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகைதாரர்கள் வெளியேறிச் சென்றதன் பின்னர் பயன்படுத்தப்படாது காணப்பட்ட அக்கட்டிடத்தை மீண்டும் குத்தகைக்கு வழங்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது உழைக்கக்கூடியதாகவிருந்த ரூபா 22.52 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கட்டிடமானது கொழும்பு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருததி அதிகாரசபையினால் பொறுப்பேற்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் நீண்டகால குத்தகை அடிப்படையின் பேரில் இக்கட்டிடத்தை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக குத்தகைதாரருக்கு வழங்க முடியாதுள்ளது. | சபை தொடர்ச்சியாக நட்டமடைகின்ற நிலைமையின் கீழ் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரை நாளாந்த இயலளவு 90,500 கிலோகிராமான 09 தேயிலைத் தொழிற்சாலைகள் 29 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக மூடப்பட்டிருந்தமை மற்றும் மேலும் 06 தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக சபையிடம் காணப்பட்ட தேயிலை வேண்டுதல்களை வழங்குவதற்கு முடியாதிருந்ததனால் வெளி கொள்வனவளார்களிடமிருந்து ரூபா 131.85 மில்லியன் பெறுமதியான 263,627 கிலோகிராம் தேயிலை ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்தல் இடம்பெற்றிருந்தது. | இராணுவம் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன கேள்விகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள IT 1 நியமத்தில் தேயிலையை பெற்றுக் கொள்ள முடியாமையினாலும் அந்நிலைமையின் கீழ் எங்கள் நிறுவனததின் தேயிலை உற்பத்தி போதியதாக இல்லாததன் காரணமாகவும் வெளித்தரப்பினர் களிடமிருந்து தேயிலையை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. | சபையின் தொழிற்சாலை களை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4.52 மில்லியன் செலவு செய்து திருத்தம் செய்யப்பட்ட ஹந்தானை உடுவெல தேயிலைச் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியும் என பிரதேச செயலாளரினால் தெரியப்படுத்தியிருந்தும் அதனை மூடிவிடுவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்ததன் காரணமாக தொழிற்சாலையில் காணப்பட்ட ரூபா 18.89 மில்லியன் பெறுமதியான இயந்திரங்களும் தொழிற்சாலைகளும் 2016 யூன் 04 ஆந் திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டன. | 2016 ஆம் ஆண்டில் நிலவிய சீரற்ற கால நிலைமையின் அடிப்படையில் தற்காலிகமாக தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அப்போதிருந்த நிருவாக உத்தியோகத்தரின் தீர்மானத்தின் அடிப்படையிலும் அச்சந்தர்ப்பத்தின் போது தேயிலை ஆணையாளரால் தொழிற்சாலையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளின் அடிப்படையிலும் இது மூடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தற்பொழுது புதிய குத்தகைதாரருக்கு தொழிற்சாலை வழங்கப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உரிய தொழிற்சாலையை விரைவாகச் செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(11) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்தவ சேவைகள் | நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் தேவைப்பாட்டில் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவிகளுக்காக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளாதிருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாகச் செயற்பட்டு மீளாய்வாண்டின் போது அங்கீகரித்த பதவியணியில் இல்லாத முகாமையாளர் - வனம், உதவி கணக்காளர், நிதி ஆலோசகர் ஆகிய பதவிகளை உள்ளடக்கிய 17 பதவிகளுக்காக 27 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு சம்பளமும் படிகளுமாக ரூபா 10.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அனுபவமுள்ள உத்தியோகத்தர் நிறுவனத்தில் இல்லாமையும் மற்றும் நிறுவன செயற்பாடுகளை தாமதிக்க முடியாததனாலும் முகாமைத்துவத்திற்கு இந்த நிறுவனத்தை தோற்றுவித்த 1972 இன் 11 ஆம் இலக்க விசவாய அதிகாரச்சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரம் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஏற்பாடுகளை மீறும் எதிர்பார்ப்பின்றி இந்த நிறுவனத்தை செயற்படுத்தும் நல்ல எண்ணத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருந்தன. மேலும் இந்த அனைத்து ஆட்சேர்ப்புக்களும் பணிப்பாளர் சபயின் அங்கீகாரத்துடன் இடம்பெற்றிருந்தன. | கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அமைச்சு செயலாளரின் சிபார்சினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் இறுதியளவில் 60 வயதினை மிகைத்த 20 நிரந்தர மற்றும் அமைய உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 16.13 மில்லியன் சம்பளமாக செலவு செய்யப்பட்டிருந்தது. | தோட்ட ஊழியர்கள் சேவை அத்தியாவசியத்தின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டும் சேவை நீடிக்கப்பட்டுமிருந்ததுடன் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் அனைத்து ஊழியர்களதும் வேலை முடிவுறுத்தப்பட்டன. | 60 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர் களுக்கு சேவை நீடிப்பு வழங்காமலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளாமலும் இருத்தல் வேண்டும். |
| (இ) | 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் முகாமையாளர் - மனித வளங்கள், முகாமையாளர் - சட்டம் ஆகிய பதவிகளுக்காக MM 1-1 சம்பளத் தொகுதி | சேவைக்காக முகாமையாளர் - மனித வளங்கள் முகாமையாளர் - சட்டம் ஆகியோரை இந்நிறுவனத்திற்குச் சேர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத் தொகுதியின் கீழ் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் |

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்டிருந்தும் சபையினால் உரிய பதவிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு HM 1-1 சம்பளத் தொகுதியில் அமர்த்தப்பட்டதன் காரணமாக 2017 ஏப்ரலிலிருந்து 2019 ஆகஸ்ட் வரை ரூபா 3.58 மில்லியன் மேலதிகச் சம்பள செலவினை சபை மேற்கொண்டிருந்தது. | இந்நிறுவனத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் நிறுவனத்திற்குரிய மனித வளங்கள் மற்றும் சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் அதற்காகச் சேர்த்துக் கொள்ளுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவத்திற்கு இணங்க பொருத்தமான சம்பளத் தலைப்பில் அமர்த்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. | கொள்ளப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கணக்குகள் பிரிவிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ ஆலோசகர், இரண்டு கணக்காளர்கள் மற்றும் 11 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது 10.11 மில்லியன் சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுகள் 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். 2018 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில கணக்குகளின் சரிசெய்யும் நாட்குறிப்பு பதிவுகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்ததனால் முடியுமான அளவு விரைவாக அவற்றை தயாரித்து இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இது கிடைத்ததன் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிதி ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை விரைவாக கணக்காய்விற்குச சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 அந் திகதிய 12 ஆம் இலக்க அரசாங்க தொழிற் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றேன். 2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டில் நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலையின் காரணமாக பணிப்பாளர் மாற்றமடைந்ததனால் கணக்காய்வு குழுவை நடாத்துவதற்கு முடியாதிருந்தது எனத் தெரிவிக்கின்றேன். மேலும் 2017 ஆம் ஆண்டிற்கான 4 குழுக் கூட்டங்களும் 2019 ஆம் ஆண்டிற்காக இதுவரை 03 குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. | உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் நல்லாட்சிக் குறிக்கோளை வலுப்படுத்துவதற்காக உரிய குழுக் கூட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நடாத்துதல் வேண்டும். |